# பிரிக்ஸ்-ஆப்பிரிக்கா வரை சென்றெட்டுதல் மற்றும் பிரிக்ஸ் பிளஸ் உரையாடலில் பிரதமரின் பங்கேற்பு

ஆகஸ்ட் 24, 2023

ஜோகன்னஸ்பர்க்கில் 24 ஆகஸ்ட் 2023 அன்று பிரிக்ஸ்-ஆப்பிரிக்கா வரை சென்றெட்டுதல் மற்றும் பிரிக்ஸ் பிளஸ் உரையாடலில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பங்கேற்றார்.

கூட்டத்தில் பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்களுடன் ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

பிரதமர் அவர்கள் பேசியபோது, பிரிக்ஸ் உலகின் தென்திசை நாடுகளின் குரலாக இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். ஆப்பிரிக்காவுடனான இந்தியாவின் நெருங்கிய கூட்டாண்மையை அவர் வலியுறுத்திக்காட்டியதோடு நிகழ்ச்சி நிரல் 2063 இன் கீழ் ஆப்ரிக்காவின் வளர்ச்சிப் பயணத்தில் இந்தியாவின் ஆதரவு உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

பல துருவ உலகை வலுப்படுத்த மேலும் ஒத்துழைக்க அழைப்பு விடுத்த பிரதமர், உலகளாவிய நிறுவனங்களை பிரதிநிதித்துவமாகவும் பொருத்தமானதாகவும் வைத்திருக்க அவற்றை சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். பயங்கரவாத எதிர்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை நடவடிக்கை, இணையப் பாதுகாப்பு, உணவு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் விநியோகச் சங்கிலியை தாக்குபிடித்தல் ஆகிய துறைகளில் ஒத்துழைக்குமாறு அவர் தலைவர்களை வலியுறுத்தினார். சர்வதேச சோலார் கூட்டணி, ஒரு சூரியன் ஒரு உலகம் ஒரு கட்டம், பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்புக்கான கூட்டணி, ஒரு பூமி ஒரு ஆரோக்கியம், பெரும் பூனை இனங்களுக்கான கூட்டு மற்றும் பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையம் போன்ற சர்வதேச முயற்சிகளின் ஒரு பகுதியாக இருக்கும்படி நாடுகளுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார். இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு அடுக்கைப் பகிர்ந்து கொள்ளவும் அவர் முன்வந்தார்.

**ஜோகன்னஸ்பர்க்**
**ஆகஸ்ட் 24, 2023**